# கிறிஸ்தவரும் நியாயப் பிரமாணமும்

## (7:1-14)

ஏற்கனவே குறிப்பிட்டபடி, ரோமர் 6ம் அதிகாரம், பாவத்துடன் கிறிஸ்தவரின் உறவுபற்றியதாக இருக்கையில், ரோமர் 7ம் அதிகாரம் நியாயப் பிரமாணத்துடன் கிறிஸ்தவருக்குள்ள உறவைப்பற்றிக் கையாளுகிறது. 7ம் அதிகாரத்தைப் பற்றி ஜான் R. W. ஸ்டாட் என்பவர், " 'நியாயப்பிரமாணம்' அல்லது 'கட்டளை' அல்லது 'எழுதப்பட்ட சட்டம்' என்பது இவ்வதிகாரத்தின் முதல் பதினான்கு வசனங்கள் ஒவ்வொன்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளது, மற்றும் இது 7:1லிருந்து 8:4 வரையிலான வசனப்பகுதி முழுவதிலும் சுமார் முப்பத்தி ஐந்து முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது" என்று எழுதினார்.[1] நியாயப்பிரமாணம் குறித்துப் பொதுவான நடைமுறைப் பயன்பாடு ஏற்படுத்தப்பட முடியும், ஆனால் மோசேயின் நியாயப்பிரமாணத்தின்மீதே பவுலின் கவனக் குவிப்பு இருந்தது (7:7ஐக் காணவும்).

யூதர்கள் நியாயப்பிரமாணத்தைத் "தேவனிடத்திலிருந்து வந்த மேன்மையான வெகுமதி" என்று கருதினர்.[2] தாவீது அரசர், "**கர்த்தருடைய** வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; **கர்த்தருடைய** சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது" என்று எழுதியிருந்தார் (சங்கீதம் 19:7). இருப்பினும், பவுல் ரோமருக்கு எழுதிய தமது நிருபத்தில், நியாயப்பிரமாணத்தைக் குறித்துப் பின்வருவன போன்ற கூற்றுக்களை ஏற்படுத்தினார்:

> ... எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை (3:20ஆ).
>
> மேலும் நியாயப்பிரமாணம் கோபாக்கினையை உண்டாக்குகிறது ... (4:15அ).
>
> மேலும், மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது ... (5:20அ).
>
> நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப் பட்டிருக்கிறபடியால் ... (6:14அ).

தேவன் கொடுத்திருந்த மாபெரும் கொடையைப் பவுல் புறக்கணித்திருந்தது போல் அவரது யூதவாசகர்களுக்குக் காணப்பட்டிருக்க வேண்டும். நியாயப்பிர

*மாணத்தைப் பற்றிய தமது கூற்றைப் பெருக்கமாக்கி தெளிவாக்க வேண்டிய வேளை பவுலுக்கு வந்திருந்தது. அதையே அவர் 7ம் அதிகாரத்தில் செய்தார்.*

*இந்தப் பாடத்தில், நாம் 1 முதல் 6 வரையிலான வசனங்களில் திறவுகோல் சொற்றொடர்களை மீண்டும் காண்போம். பின்பு நாம் 7 முதல் 14 வரையிலான வசனப்பகுதியின்மீது கவனம் செலுத்துவோம். வேத வசனப்பகுதியை எடுத்துரைத்து முடித்தபின்பு, இந்தப் பாடமானது இன்றைய நாட்களில் கிறிஸ்தவ வாழ்விற்கான நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்தும்.*

## வேதபாடப்பகுதியின் மீது ஏற்புடைய விளக்கங்கள்

***நியாயப்பிரமாணத்துடன் கிறிஸ்தவருக்குள்ள உறவுமுறை என்ன?***

*"ஒரு மனுஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகிறது" என்று குறிப்பிட்டுப் பவுல் 7ம் அதிகாரத்தைத் தொடங்கினார் (வசனம் 1ஆ). அவர் தமது கருத்தைத் திருமணம் என்ற விஷயத்தைக் கொண்டு விவரித்தார்: ஒரு பெண், அவளது கணவர் உயிரோடிருக்குமளவும் அவரது பிரமாணத்தினால் கட்டப்பட்டிருக்கிறாள்; ஆனால் அவர் இறந்துபோனால், அவள் "விடுதலையாகி" இருக்கிறாள், அவள் சட்டப்பூர்வமாக மறுதிருமணம் செய்துகொள்ளலாம் (வசனங்கள் 2, 3). "விடுதலையாய்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை katargeo என்ற வார்த்தையிலிருந்து வந்துள்ளது. லியோன் மோரிஸ் என்பவர், katargeo என்பது "முற்றிலுமாக ஒன்றுமற்றது மற்றும் வீணானது என்று ஆக்கப்படுதல்" என்று அர்த்தப்படும் ஒரு பலமான வார்த்தை என்று கருத்துத் தெரிவித்தார்.[3]*

*பவுல் பின்வரும் நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்தினார்: "அப்படிப் போல, என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்" (வசனம் 4). இவ்விடத்தில், நியாயப்பிரமாணத்துடன் நமக்குள்ள உறவுமுறைப் பற்றிய பவுலின் முதல் பிரதானக் கூற்றுள்ளது: நாம் "கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தோம்." நமது விசுவாசம் நம்மை, "அவரது மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானம்" பெற்றவர்களாகும்படி (6:3) வழி நடத்தியபோது இந்த "மரணம்" நடைபெற்றது.*

*அடுத்ததாகப் பவுல், நியாயப்பிரமாணத்திற்கு மரித்தவர்கள் ஆவதற்கு முன்பு வாழ்வு எதைப்போல இருந்தது என்பது பற்றிப் பேசினார்: "நாம் மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள் மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களிலே பெலன்செய்தது" (7:5). பாவம் நிறைந்த இச்சைகளை எழுப்புதல் என்பது நியாயப்பிரமாணத்தின்* நோக்கமாக *இருந்ததில்லை. பாவத்தை வெளிப்படுத்தி விளக்கப்படுத்தி, மக்கள் தங்கள் வாழ்விலிருந்து பாவத்தை நீக்கிப்போடும்படி அவர்களை ஊக்குவித்தலே நியாயப்பிரமாணத்தின் நோக்கமாயிருந்தது. இருந்தபோதிலும், பாவம் நிறைந்த இச்சைகளைத் தூண்டுதல் என்பது நியாயப்பிரமாணத்தின்* விளைவுகளில் *ஒன்றாக இருந்தது. 8 முதல் 13 வரையிலான வசனங்களில், பவுல் தம் இருதயத்தில் நியாயப்பிரமாணம் இச்சையைத் தூண்டியது குறித்த ஒரு உதாரணத்தைக்*

கொடுத்தார்.

நியாயப்பிரமாணம் பாவத்தை *எவ்வாறு* தூண்டிற்று? இங்கு (ஒன்றின்மீது இன்னொன்று கவிந்துள்ளதாக இருப்பினும்) பல கருத்துகள் உள்ளன. முதலாவது, நியாயப்பிரமாணம் பாவத்தைப் பற்றிக் கவனம் செலுத்தும்படி அழைத்தது. நான் உங்களிடத்தில், "ஒரு யானையைப்பற்றி *நினைக்காதீர்கள்*" என்று கூறுவேனென்றால், நீங்கள் உடனடியாக ஒரு யானையைப் பற்றி நினைப்பீர்கள். ஒருவேளை பலநாட்களாக, வாரங்களாக, அல்லது ஒருவேளை பல ஆண்டுகளாகக்கூட நீங்கள் யானையைப் பற்றி நினைக்காது இருந்திருக்கலாம்; ஆனால் நான், "ஒரு யானையைப்பற்றி *நினைக்காதீர்கள்*" என்று உங்களிடத்தில் கூறிய அந்தக் கணத்திலேயே அந்த நினைவு உங்கள் மனதிற்கு வந்துவிடும். பத்துக்கட்டளைகளைப் பட்டியலிட்ட ஒரு சுவரொட்டியை மறுத்துப் பேசிய ஒரு மனிதரைப்பற்றி நான் வாசித்திருக்கிறேன். அவர், "அது மக்களின் சிந்தைகளில் மிக அதிகமான கருத்துக்களை இடுகிறது" என்று அவர் கூறினார்.[4] தேவனுடைய வசனத்தை நமது கண்களுக்கு முன்பாகக் காத்து வைத்திருப்பதில் மதிப்புள்ளது (எசேக்கியேல் 37:20ஐக் காணவும்), ஆனால் மனிதர், "செய்யாதிருப்பாயாக" என்ற கட்டளைகளைப் பற்றி, அவை சில மனிதர்களின் சிந்தைகளில் "கருத்துக்களை இடுகின்றன" என்று கூறுதல் சரியானதாக இருக்கலாம்.

இரண்டாவதாக, ஒரு தடையானது தடைசெய்யப்பட்டுள்ளவற்றிடத்தில் ஒரு குறிப்பிட்ட ஈர்ப்பைக் கொண்டுவர முடியும். "உள்ளே வரக்கூடாது" என்ற அறிவிப்புக் குறியீட்டைக் காணும்போது, நாம் ஏன் யாரோ ஒருவர் நம்மை "உள்ளே வரக்கூடாது" என்று விரும்புகிறார் என்பதை அறிய ஆவலுள்ளவர்கள் ஆகிறோம். அப்படிப்பட்ட அறிவிப்புக் குறியீடு, அடிக்கடி நம்மைத் துன்புறும் வழியிலிருந்து வெளியே இருக்குமாறு காக்கிறது, ஆனால் நாம் அந்த அறிவிப்புக் குறியீட்டிற்கு அப்பால், விரும்பப்படத்தக்கதொன்று இருப்பதாகவும் அதை நாம் பெறுவதை யாரோ ஒருவர் விரும்புவதில்லை என்றும் நினைத்து வியப்படைகிறோம். நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் என்று தேவன் தடைசெய்த விஷயமானது இதற்குத் தலைசிறந்த உதாரணமாக உள்ளது (ஆதியாகமம் 2:16, 17; 3:1-5).

மூன்றாவதாக, சிலவற்றைச் *செய்யக்கூடாது* என்று நமக்குக் கூறப்படும்போது, நம்மில் பலர் அதே விஷயத்தைச் *செய்ய* விரும்புபவர்களாக்கும் முரட்டுத்தனமான பதில்செயலைக் கொண்டுள்ளோம். ஒருவேளை அந்தத் தடைவிதிக்கப்படும் முன்னர், நாம் அப்படிப்பட்ட விருப்பத்தைக் கொண்டிராமல் இருந்திருக்கலாம், ஆனால் தடைவிதிக்கப்பட்டவுடனே, அதைச் செய்ய வேண்டும் என்ற விருப்பம் நமக்குள் உண்டாகிவிடுகிறது. உதாரணமாக, "பெயின்ட் இன்னும் உலரவில்லை. தொட வேண்டாம்" என்ற அறிவிப்புக் குறியீட்டை எடுத்துக்கொள்ளுங்கள். அநேகமாக, அந்த அறிவிப்பு வைக்கப்படும் முன்னர், அந்தப்பொருளைத் தொடும் விருப்பம் எதுவும் எவரொருவருக்கும் இருந்திராது; ஆனால் அந்த அறிவிப்பு வைக்கப்பட்ட உடனே, புதிதாய்த் தீட்டப்பட்ட பெயின்ட்டின்மீது விரல்ரேகைகள் தோன்றத் தொடங்கி விடுகின்றன.

கடைசியாக, அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்குதல் என்பது மக்களில் சிலருக்கு ஒரு மெய்சிலிர்ப்பை, அதிகார உணர்வைக்கூடத் தருகிறது. நீதி

மொழிகள் புத்தகத்தில் வரும் ஒழுக்கமற்ற பெண் ஒரு இளம் வாலிபனைக் கெடுக்க முயற்சி செய்து, "திருட்டுத் தண்ணீர் தித்திக்கும்" (நீதிமொழிகள் 9:17அ) என்று ரகசியக்குரலில் கூறினாள். அதிகாரம் இல்லையென்றால், கலகம் செய்பவர்கள் இருக்க மாட்டார்கள்; எனவே, ஒரு கருத்தில், அதிகாரம் கலகத்தை "தூண்டுகிறது" என்று கூறப்படலாம்.

இந்த மனித விருப்பங்களைப் பற்றி அறிந்திருந்தவராகப், பவுல் "நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள்" என்று கூறினார் (ரோமர் 7:5அ). "இப்பொழுதோ ... நாம் ... நியாயப்பிரமாணத்துக்கு ... அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்" என்று அவர் கூறினார் (வசனம் 6). "விடுதலையாக்க" என்பதற்கான வார்த்தை, 2ம் வசனத்தில் உள்ளது போன்ற வார்த்தையிலிருந்தே வந்துள்ளது. அங்கு ஒரு பெண், தனது கணவர் இறக்கும்போது தனது திருமண பந்தங்களிலிருந்து "விடுதலையாக்கப்பட்டு" இருக்கிறாள் என்று நாம் வாசித்தோம். இவ்வார்த்தையானது, ஒரு பழைய உறவுமுறை "ஒன்றுமற்றதும் வீணாக்கப்பட்டதும்" ஆகத் தரவழைக்கப்பட் டுள்ளதைச் சுட்டிக்காண்பிக்கிறது.

பவுல், "நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் *மரித்தவர்* களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்" என்று கூறினார் (வசனம் 6ஆ). "நம்மைக் கட்டியிருந்த" என்பது நியாயப்பிரமாணத்தைக் குறிக்கிறது. பேதுரு, நியாயப்பிரமாணத்தைப் பற்றி, "நம்முடைய பிதாக்களாலும் நம்மாலும் சுமக்கக் கூடாதிருந்த நுகத்தடி" என்று கூறினார் (நடபடிகள் 15:10). கட்டும் அந்த "நுகத்தடிக்கு" மக்கள் எப்போது மற்றும் எவ்வாறு மரித்தனர்? 4ம் வசனத்தின்படி, அவர்கள் "[சிலுவையில் அறையப்பட்ட] கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்கள்" ஆயினர் (ரோமர் 7:4). நமது முந்திய பாடத்தில் வலியுறுத்தப்பட்டபடி, அவர்கள் அப்போது, சபையாகிய கிறிஸ்துவின் மணவாட்டியினுடைய அங்கமாகும்படி விடுதலை யாக்கப்பட்டனர்.

### இது நியாயப்பிரமாணம் மோசமானது என்று அர்த்தப்படுத்துகிறதா?

பவுல் தாம் கூறியது கலகத்தை ஏற்படுத்தும் என்பதை நன்கு அறிந்திருந்தார், குறிப்பாக அது தமது யூத வாசகர்களுக்குத் தொந்தரவை ஏற்படுத்தும் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். இவ்வாறாக, அவர் நியாயப்பிரமாணத்தைக் குறித்துத் தாம் கூறியிருந்ததை விளக்கவும் விரிவாக்கவும் துரிதமானார். மீண்டும் ஒருமுறை அவர் கேள்வி - மற்றும் - பதில் என்ற அணுகுமுறையைப் பயன் படுத்தினார். அவர் பின்வரும் கேள்வியுடன் தொடங்கினார்: "ஆகையால் என்ன சொல்லுவோம்? நியாயப்பிரமாணம் பாவமோ?" (வசனம் 7அ). 6ம் அதிகாரம் வாசகர்கள் *பாவத்திற்கு மரித்திருந்தனர்* என்று பலமுறை கூறுகிறது (வசனங்கள் 2, 7, 11). 7ம் அதிகாரம், அவர்கள் *நியாயப்பிரமாணத்திற்கு மரித் திருந்தனர்* என்று இருமுறை கூறுகிறது (வசனங்கள் 4, 6). அதன்மூலமாகப் பவுல், "பாவம்" மற்றும் "நியாயப்பிரமாணம்" ஆகியவற்றைச் சமானப்படுத்தினாரா? இந்தக் கருத்திற்கு அவரது பதிலுரையானது காலந்தவறாததாகவும் அழுத்த மானதாகவுமிருந்தது: "அல்லவே!" (வசனம் 7ஆ).

நியாயப்பிரமாணம் பாவமல்ல, அது பாவம் செய்யவில்லை, தன்னுள் ளாகவே பாவத்தை உற்பத்தி செய்யவில்லை என்று வலியுறுத்த முன்சென்றார்.

அது பாவத்தை *வெளிப்படுத்த* மாத்திரம் செய்தது. பவுல், "பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினால் நான் அறிந்தேனேயன்றி மற்றப்படி அறியவில்லை" என்று கூறினார் (வசனம் 7இ). முன்னதாக அவர், "... பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிற[து]" என்று கூறியிருந்தார் (3:20).

"நாம்" (வசனம் 7அ) என்பதிலிருந்து "நான்" (வசனம் 7இ) என்பதற்கு மாற்றத்தைக் கவனியுங்கள். இந்த இடத்திலிருந்து இவ்வதிகாரத்தின் முடிவு வரையிலும் இந்த அப்போஸ்தலர் ("நான்" என்ற) தன்மை ஒருமைச்சொல்லையே பெரும்பாலும் பயன்படுத்தினார். அவரது குறிப்புரைகள் வலிவார்ந்த வகையில் தனிப்பட்டவையாக இருந்தன.

ரோமர் 7ம் அதிகாரத்தைக் குறித்துக் கணிசமான அளவுக்கு வாத எதிர்வாதம் எழுந்துள்ளது, மற்றும் இவ்வாத எதிர்வாதங்களில் பெரும்பான்மையானவை "நான்" என்ற வார்த்தையின்மீது மையங்கொண்டுள்ளன. [எத்தியோப்பிய] மந்திரியின் கேள்வியைத் தழுவிய நிலையில் நாம், "பவுல் யாரைக் குறித்துப் பேசுகிறார்? தம்மைக்குறித்தோ அல்லது வேறொருவரைக்குறித்தோ?" என்று நாம் கேட்கிறோம் (நடபடிகள் 8:34ஐக் காணவும்). மோரீஸ் என்பவர், "பவுல் தாம் கூறவந்த விஷயத்தில் தம்மைப்பற்றியே பேசுகிறார் என்பது மறுக்க இயலாததாக உள்ளது. இந்த நிருபத்தின் தொடக்கத்திலிருந்து செய்யா திருப்பினும், இந்த அதிகாரத்தில் அவர், தன்மை ஒருமைப் பெயர்ச்சொல்லைத் தொடர்ந்து பயன்படுத்தினார்" என்று கருத்துத் தெரிவித்தார்.[5] பவுலின் மொழி நடையைத் தனிப்பட்ட அனுபவங்களுக்கான குறிப்பாகக் கண்ணோக்குதலே அதை விளக்கப்படுத்துவதற்கு, மிகவும் எளிமையான, மிகவும் இயல்பான, மற்றும் மிகவும் தெளிவான வழியாக உள்ளது.[6] இது அவர் பிற மக்களையும் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்ற சாத்தியக்கூற்றை நீக்கிப்போடுவ தில்லை. அவருக்கே உரியதாக இருந்த அது மற்றவர்களுக்குரியதாகவும்கூட இருந்திருக்க வேண்டும்.

பவுல் தம்மைப் பற்றியே பேசினார் என்று யூகித்துக்கொண்டால், அவர் "பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினால் நான் அறிந்தேனேயன்றி மற்றப்படி அறியவில்லை" என்று கூறியபின்பு, அவர் குறிப்பாக ஒரு உதார ணத்தைக் கொடுத்தார்: " 'இச்சியாதிருப்பாயாக' என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சை பாவம் என்று நான் அறியாமலிருப்பேனே" (வசனம் 7ஈ). இச்சைக்கு எதிரான கட்டளையானது பத்துக்கட்டளைகளில் பத்தாவதாக உள்ளது (யாத்திராகமம் 20:17).

ரோமர் 7:7ஈயில், "இச்சை" என்பதற்குரிய கிரேக்கச் சொற்றொடர் "இச்சித்தல்" என்று அர்த்தப்படும் (*epithumia* என்ற) கூட்டு வார்த்தையிலிருந்து வந்துள்ளது. புதிய ஏற்பாட்டில், இது வழக்கமாகப் பொல்லாத இச்சை யொன்றைக்[7] குறிக்கிறது ("இச்சைகள்"; ரோமர் 1:24). F. F. புரூஸ் என்பவரின் கூற்றுப்படி, இது பொதுவாக, "மனிதருடைய ஆத்துமாவில் தேவன் ஒருவர் மாத்திரமே இருக்க வேண்டிய இடத்தைப் பிடித்துக்கொள்கிற சுயமதிப்பின் வலிவார்ந்த தன்மைக்கான அப்படிப்பட்டதொரு விருப்பத்தை" சுட்டிக்காண்பிக்கிறது.[8]

பவுல், யாத்திராகமத்திலிருந்து முழுக்கட்டளையையும் மேற்கோள் காண்பிக்கவில்லை. அவர் தேவனைத் தவிர வேறு *எந்த விஷயத்திற்காவது* அதிகமான ஆவல் கொண்டுள்ளது என்ற பொதுவான கருத்தின்மீது கொண்டிருந்த

அக்கறையைக் காட்டிலும் அதிகமாக இச்சை என்ற பாடக்கருத்துப்பற்றி அக்கறையாக இருக்கவில்லை.

இச்சியாதிருத்தல் பற்றிய கட்டளையானது, பவுல் இவ்விடத்தில் ஏற்படுத்திய விவாதத்திற்கு மிகவும் ஏற்புடையதாக இருந்தது. முதலாவது, அது இருதயத்தைக் குறிப்பாக மற்றும் முற்றிலுமாக நோக்கம் கொண்ட ஒரே ஒரு கட்டளையாக இருந்தது. மற்ற கட்டளைகள் புறம்பான செயல்களுடன் (குறைந்தபட்சம் மேலோட்டமாகவாவது) கீழ்ப்படியப்பட முடியும், ஆனால் இந்தக் கட்டளைக்கு அவ்வாறு செய்ய இயலாது.

மேலும், இந்தக் கட்டளையானது, மற்ற எல்லாப் பாவத்திற்கான ஆதாரமூல மான *சுயநலம்* என்பதை எதிர்த்து நிற்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. இச்சை என்பது அன்பிற்கு எதிரிடை என்று கூறப்பட்டுள்ளது. இச்சை என்பது சுயத்தை மைய மாகக் கொண்டதாக இருக்கையில், அன்பு என்பது, "தற்பொழிவை நாடா[ததாக]" உள்ளது (1 கொரிந்தியர் 13:5). இச்சை என்பது *பெறுதலை* நோக்கங்கொண்டு இருக்கையில், அன்பு என்பது *கொடுப்பதை* மையங்கொண்டுள்ளது (யோவான் 3:16ஐக் காணவும்).

இத்துடன் கூடுதலாக, இந்தக் கட்டளையானது மிகவும் *வஞ்சிக்கும்* பாவம் ஒன்றைப் பற்றிக் குறிப்பிடுவதாக உள்ளது (ரோமர் 7:11ஐக் காணவும்). இச்சை என்றால் என்ன என்றும் மற்றும் அது முன்னிறுத்துகிற அபாயங்கள் என்ன என்பவை பற்றியும் ஒருவருக்கு அறிவுறுத்தப்படாவிட்டால், அந்த ஒருவர் அதை ''இயல்பானது'' மற்றும் "சாதாரணமானது" என்று நினைத்துவிடலாம். பொருட்களை/விஷயங் களை *விரும்புதல்* என்பது இயல்பானதல்லவா?

நியாயப்பிரமாணமானது இச்சையின் இயல்பையும் விளக்கத்தையும் பவுலுக்கு வெளிப்படுத்திற்று; அது இச்சையை ஒரு பாவம் என்று அடையாளப் படுத்திற்று. ஆகவே அது அவரை இச்சிக்கும்படி *செய்ததா?* இல்லை, நியாயப் பிரமாணம் அல்ல, ஆனால் *பாவமே* வில்லனாக இருந்தது - எனவே பவுல் விரைவாகப் பின்வருமாறு சுட்டிக்காண்பித்தார்: "*பாவமானது* கற்பனையினாலே சமயம் பெற்றுச் சகலவித இச்சைகளையும்[9] என்னில் நடப்பித்தது" (வசனம் 8அ). ''பாவம்'' என்பது நம்மைத் தேவனுக்குக் கீழ்ப்படியாதிருக்கும்படி தூண்டுகிற முகவராக நபர்த்துவப்படுத்தப்படுகிறது. பிசாசானவனே உண்மை யான முகவர் என்று நாம் புரிந்துகொள்கிறோம் (எபேசியர் 6:11; 1 பேதுரு 5:8 ஆகிய வசனங்களைக் காணவும்), ஆனால் "நியாயப்பிரமாணம்'' மற்றும் "பாவம்" ஆகியவற்றை வேறுபடுத்தி ஒப்பிடுவதே பவுலின் நோக்கமாக இருந்தது (வசனங்கள் 7, 12, 13). இவ்வாறாக, அவர் பாவம் என்ன செய்கிறது என்பதன்மீது கவனம் குவித்தார்.

இச்சியாதிருப்பாயாக என்ற கட்டளை பவுலை இச்சிக்கும்படி செய்ய வில்லை, ஆனால் பாவமானது இச்சையை உண்டாக்க "கற்பனையினாலே *சமயம் பெற்றுக்" கொண்டது.* பவுல் நாம் ஈடுபட்டிருந்த ஆவிக்குரிய போராட்டத்தைப் பிரதிபலிக்க இராணுவச் சொல்லாக்கத்தைப் பயன்படுத்தினார் (எபேசியர் 6:10-13ஐக் காணவும்). "சமயம்" என்ற வார்த்தையானது "தொடக்க இடம்" என்று அர்த்தப்படும் aphorme என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; இது யுத்தத்தில் இயக்கச்செயல்கள் நடைபெறும் அடிப்படைத்தளம் ஒன்றைக் குறிக்கப் பயன்பட்டது. "நியாயப்பிரமாணமானது ஆத்துமாவின்மீது பாவம்

*தனது தாக்குதலைத் தொடுப்பதற்குரிய இயக்கச் செயல்களுக்கான அடித்தளத்தை அளித்தது" என்பதே ரோமர் 7:8, 11ல் பவுலின் கருத்தாக இருந்தது.*[10]


*பாவமானது, நியாயப்பிரமாணத்தைத் தனது "இயக்கச் செயல்களின் அடித்தளமாக" பயன்படுத்தி, பவுலைத் தாக்கி அவருக்குள் "சகலவிதமான இச்சைகளையும்" உண்டாக்கியது - இது அவரது அயலானுக்குரியவற்றை இச்சித்தல் என்பதை மாத்திரம் கொண்டதாக இருக்கவில்லை, ஆனால் பலவகையான இச்சைகள் என்ற பரந்த அளவைக் கொண்டிருந்தது. இவ்வித மாக தனது சொந்த நோக்கங்களுக்காக பாவமானது நியாயப்பிரமாணத்தை பயன்படுத்தியது.*

*பாவம் இதை எப்படிச் செய்தது? நாம் முன்னதாக, நியாயப்பிரமாணம் எவ்வாறு பாவம் நிறைந்த இச்சைகளைத் தூண்டியது என்பது பற்றிய கருத்துக் களை ஏற்படுத்தியிருந்தோம்: இது பாவத்தின்மீது கவனம்செலுத்தும்படி அழைத்தது; இது பாவத்தின்மீது குறிப்பிட்ட வகையிலான ஈர்ப்பைக் கொடுத்தது; இது கலகம் செய்வதற்கான உள்ளான கருத்துணர்வைக் குறித்தது; இது "அபாயம்" என்பதன்மீதான மெய்சிலிர்த்தலுக்கான சில விருப்பத்தை வேண்டுகோளாக விடுத்தது. இருப்பினும், நாம் கட்டளை ஒன்று இருப்பதி னாலேயே அது இவை எல்லாவற்றையும் தானாகவே செய்துவிடுகிறது என்று நினைத்துவிடக்கூடாது. இல்லை. காட்சிகளுக்குப் பின்னால் பாவம் (சாத்தான்) உள்ளது, இது கட்டளையைப் பயன்படுத்தி, இந்த விளைவுகளை உண்டாக்குகிறது. எடுத்துக்காட்டாக, சர்ப்பம் (சாத்தான்; 2 கொரிந்தியர் 11:3) ஏவாளிடத்தில் வந்தபோது, அவன் முதலில் தேவனுடைய கட்டளையின் மீது தான் கவனத்தை ஈர்த்தான் (ஆதியாகமம் 3:1). அவன், தேவன் நியாய மற்றவராக இருந்தார் என்றும் விரும்பத்தக்க சிலவற்றை அவர் ஆதாம் மற்றும் ஏவாளிடத்திலிருந்து விலக்கி வைக்க முயற்சி செய்தார் (வசனங்கள் 4, 5) என்றும் குறிப்புக்காட்டினான். சர்ப்பமானது கீழ்ப்படியாமையை வசீகரமானதாகச் செய்தது (வசனங்கள் 5, 6). கலகம் என்பது முடிவாயிருந்தது (வசனம் 6).*

*இப்போது நாம் நமது தற்போதைய வேதவசனப்பகுதிக்குத் திரும்புவோ மாக: "நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால் பாவம் செத்ததாயிருக்குமே" (வசனம் 8ஆ). "நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்" என்பதால் (1 யோவான் 3:4), நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால், பாவம் இல்லை. "இல்லாத ஒரு சட்டத்தை எவரொருவரும் மீற இயலாது" (ரோமர் 7:8;* NIrV*). மீண்டுமாக, ஏதேன் தோட்டம் ஒரு நல்ல விவரிப்பாக உள்ளது. தேவன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கட்டளைகளைக் கொடுத்திராத வரையில், அவர்களைச் சோதிப்பதற்குச் சந்தர்ப்ப (சாத்தான்) அடித்தளம் எதையும் கொண்டிருக்கவில்லை.*

*தொடர்ந்து பவுல், "முன்னே நியாயப்பிரமாணமில்லாதவனாயிருந்தபோது நான் ஜீவனுள்ளவனாயிருந்தேன்" என்று கூறினார் (வசனம் 9அ). பவுல் எப்போது "நியாயப்பிரமாணமில்லாதவராயிருந்தபோது ஜீவனுள்ளவராயிருந்தார்" என்பது பற்றி விளக்கவுரையாளர்கள் திகைப்படைகின்றனர். அவர்களில் பலர், ஆதாமின் பாவத்தினால் சிலவழியில், குழந்தைகள் பாவக்கறையுடன் பிறக்கின்றன என்ற தவறான நம்பிக்கையைக் கொண்டுள்ளனர் என்பதே பிரச்சனையாக உள்ளது. குழந்தைகள் ஆதாமின் குற்றத்தைச் சுதந்தரிப்பதில்லை என்ற வேதவசனரீதி யான நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்பவர்களுக்கு, இவ்வசனப்பகுதியைப்*


புரிந்துகொள்ளச் சுலபமான வழியொன்று உள்ளது: எல்லாக் குழந்தைகளைப் போலவே, பவுலும் சுத்தமாக மற்றும் பரிசுத்தமாகவே (தேவனுக் கென்று "பிழைப்பவராக"), நியாயப்பிரமா ணத்தைப் பற்றி முற்றிலும் அறியாமையுடன் ["நியாயப்பிரமாணம் இல்லாதவராக"] பிறந்தார். அந்த வேளையில், பாவம் அவருக்கு "மரித்து" இருந்தது, ஆனால் அவர் *"உயிருடன்"* இருந்தார்.




பின்பு, நாம், "கற்பனை வந்தது" என்று வாசிக்கிறோம் (வசனம் 9ஆ). எல்லா யூதப் பையன்களைப் போலவே, பவுலும் நியாயப்பிரமாணத்தில் போதிக்கப்பட்டார் (2 தீமோத்தேயு 3:15ஆ வைக் காணவும்). ஏதோ ஒரு வேளையில், அவர் ஒழுக்கம்சார்ந்த மனச்சாட்சியை மேம்படுத்திக்கொண்டு தேவனுக்குக் கணக்கு ஒப்புவிப்பவரானார்.

> … அவர் கட்டளைகளைக் கடைப்பிடிக்கும் பொறுப்பை மேற் கொண்டபோது, பக்குவப்படுதல் அடையப்பட்டது. இன்றைய நாட்களின் யூதப்பையன் ஒருவன் [வழக்கமாகத் தனது பதிமூன்றாம் வயதில்] *பார் மிட்ஸ்வா* சடங்கில் ஈடுபட்டு "நியாயப்பிரமாணத்தின் மகன்" ஆவதுபோன்றே அவரும் நியாயப்பிரமாணத்தின் நுகத்தடியை ஏற்றுக்கொண்டார்.[11]

"கற்பனை வந்துபோது பாவம் உயிர்கொண்டது, நான் மரித்தவனானேன்" என்று பவுல் கூறினார் (ரோமர் 7:9ஆ, இ). அவர் ஒரு குழந்தையாக இருந்தபோது, பாவம் மரித்திருந்தது அவர் பிழைத்திருந்தார்; ஆனால் அவர் கணக்கு ஒப்புவிக்கும் வயதை அடைந்தபோது, பாவம் "உயிர்பெற்று இருந்தது" மற்றும் ஆவிக்குரிய வகையில் அவர் மரித்தார்.




"கற்பனை" என்பது "ஜீவனை விளைவித்தல்" என்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தது (வசனம் 10அ; லேவியராகமம் 18:5; ரோமர் 10:5 ஆகியவற்றைக் காணவும்), ஆனால் அது பவுலுக்கு இவ்விதமான விளைவைக் கொண்டிருக்க வில்லை. அவர், "இப்படியிருக்க [என்றென்றைக்குமான ஆவிக்குரிய] ஜீவனுக்கேதுவான கற்பனையே [நான் கற்பனையைக் கடைப்பிடிக்கத் தவறியபோது] எனக்கு [ஆவிக்குரிய] மரணத்துக்கேதுவாயிருக்கக்கண்டேன்" என்று கூறினார் (7:10).

இது, கட்டளையில் ஏதோ சில விஷயங்கள் தவறாயிருந்தன என்று அர்த்தப்படுத்தியதா? இல்லை, கட்டளை தன்னில்தானே நல்லதாகவே இருந்தது - ஆனால் பாவம் (சாத்தான்) அதை மோசமான நோக்கங்களுக்குப் *பயன்படுத்தினான்:* "பாவமானது கற்பனையினாலே சமயம்பெற்று, என்னை வஞ்சித்து" (வசனம் 11அ). 8ம் வசனத்தில், பவுல் பாவமானது கற்பனையைச் சகலவித இச்சைகளையும் நடப்பிக்க "இயக்கச் செயல்களின் தளமாக"

பயன்படுத்தியது என்று கூறினார். 11ம் வசனத்தில் அவர் அதே சொற்றொடரைப் பயன்படுத்தி, பாவம் தன்னை *வஞ்சிப்பதற்குக்* கற்பனையைப் பயன்படுத்தியது என்று கூறினார்.

"வஞ்சித்து" என்பதற்கான கிரேக்க வார்த்தை *exapatao* என்பதிலிருந்து தரவழைக்கப்பட்டுள்ளது, இது "மோசடிசெய்தல்/வஞ்சித்தல்" (*apato)* என்பதற்கான வார்த்தையை மேற்கொண்டு அதை *ek* என்ற முன்னிடைச்சொல் கொண்டு பெலப்படுத்துகிறது. இது "*முற்றிலும்* மோசடி செய்தல், *முழுமையாக* வஞ்சித்தல் என்பதைக் குறிக்கிறது."[12]

மோரீஸ் என்பவர், "வஞ்சித்தலின் சில கூறுகள் சோதிக்கப்படுதலில் எப்போதுமே ஈடுபட்டுள்ளது" என்று உற்றுக் கவனித்திருக்கிறார்.[13] பாவம் தனது உண்மையான இயல்பு மற்றும் நிறைவான விளைவுகள் குறித்து வஞ்சிக்காதிருந்தால், யாருமே எப்பொழுதும் பாவம் செய்ய விருப்பம் கொண்டிருக்கமாட்டார்கள். ஒரு விளக்கவுரையானது, பாவம் "தவறான வாக்குறுதிகள் மற்றும் வஞ்சனை ஆகியவற்றினால் நிறைந்துள்ளது" என்று குறிப்பிட்டது:

- பாவமானது, ஒவ்வொரு முறையும் முந்தின வேளையைக் காட்டிலும் அதிகமாக நமது விருப்பங்களைத் திருப்தி செய்வதாக வாக்களிக்கிறது.
- பாவமானது, நமது நடவடிக்கைகள் எவரொருவரும் அறியாதபடி மறைவாகக் காக்கப்பட முடியும் என்று வாக்களிக்கிறது.
- பாவமானது, நாம் விளைவுகளைப் பற்றிக் கவலைப்படத் தேவையிருக்காது என்று வாக்களிக்கிறது.
- பாவமானது, விசேஷித்த பயன்களை வாக்களிக்கிறது: ஞானம், அறிவு, மற்றும் வசதியான சொற்புரட்டு.
- பாவமானது, கூட்டுறவுக்கு மாற்றாக அதிகாரம் மற்றும் கௌரவம் ஆகியவற்றை வாக்களிக்கிறது.[14]

பவுலின் சொந்த அனுபவத்தைப் பொறுத்தமட்டில், பாவம் (சாத்தான்) "அவரை, மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதன்மூலம் நீதியையும் ஜீவனையும் பெறமுடியும் என்று யூகிக்கும்படி மோசடி செய்து வஞ்சித்தது" (பிலிப்பியர் 3:4-7), மற்றும் அது "கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்துதலில் தாம் தேவனுக்கு ஊழியம் செய்ததாக நினைக்கும்படியும்" அவரைத் தூண்டியது (நடபடிகள் 26:9), உண்மைநிலையிலோ அவர் தம்மை பிரதான பாவியாக்கிக் கொண்டிருந்தார் (1 தீமோத்தேயு 1:15).[15] இவ்வாறாகப் பவுல் செயல் விளைவில், "பாவமானது கற்பனையினாலே ... என்னைக் கொன்றது" என்று கூறினார் (ரோமர் 7:11ஆ). நியாயப்பிரமாணமல்ல, ஆனால் *பாவமே* அவரைக் கொன்றது.

பவுலினால் வரைகுறிப்பிடப்பட்ட வரிசைத்தொடர் பின்வருமாறு தொகுத்துரைக்கப்படலாம். (1) ஒரு காலத்தில் (அவர் குழந்தையாயிருந்தபோது), அவர் "ஜீவன்" உள்ளவராக இருந்தார். (2) பின்பு அவர் நியாயப்பிரமாணத்தைக் கற்றறிந்தபோது "கற்பனை வந்தது." (3) அவருக்குத் தொடர்ந்து ஜீவனை அளித்தலே நியாயப்பிரமாணத்தின் நோக்கமாக இருந்தது. (4) இருப்பினும், பாவம் அவரை வஞ்சிக்க நியாயப்பிரமாணத்தைப் பயன்படுத்திக்கொண்டது.

(5) பாவத்தால் வஞ்சிக்கப்பட்டநிலையில், அவர் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாதிருந்தார். (6) ஆவிக்குரிய மரணமே இதன் விளைவாக இருந்தது. இது பவுலின் வாழ்வில் வரிசைத் தொடராக இருந்தது - மற்றும் இதுவே கணக்கு ஒப்புவிக்கும் வயதில் வாழ்கிற ஒவ்வொரு தனிநபருடைய வாழ்விலும் வரிசைத்தொடராக உள்ளது.

இவ்வரிசைத் தொடர் ஆதாம் மற்றும் ஏவாள் ஆகியோரின் வாழ்வைப் பிரதிபலிக்கிறது. (1) தேவனுடைய தடை அவர்களுக்குத் தரப்படுவதற்கு முன், அவர்கள் "ஜீவனுள்ளவர்களாக" இருந்தனர். (2) பின்பு "கட்டளை வந்தது": தேவன், "நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்; ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" என்று கூறினார் (ஆதியாகமம் 2:16, 17). (3) அவர்களைத் தொடர்ந்து ஜீவிக்க அனுமதித்தல் என்பதே கட்டளையின் நோக்கமாக இருந்தது: அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து இருந்திருக்கும் வரையில், அவர்களால் ஜீவவிருட்சத்தின் கனியையும் புசித்திருக்க முடியும். (அவர்கள் பாவம் செய்த பின்பு, இது தடைசெய்யப்பட்டிருந்தது [ஆதியாகமம் 3:21].) (4) இருப்பினும், பாவம் (சாத்தான்) ஏவாளை வஞ்சிக்க இந்தக் கட்டளையைப் பயன்படுத்திக்கொண்டது (3:1-5; 2 கொரிந்தியர் 11:3; 1 தீமோத்தேயு 2:14 ஆகியவற்றைக் காணவும்). (5) இதன் விளைவாக, ஆதாமும் ஏவாளும் தேவனுக்குக் கீழ்ப்படியாமற் போனார்கள் (ஆதியாகமம் 3:6). (6) மரணம் விளைவாயிற்று - இதில் உடல்ரீதி யான மற்றும் ஆவிக்குரிய என்ற இரண்டு மரணங்களும் அடங்கியிருந்தன (3:24; 5:5; ஏசாயா 59:1, 2ஐக் காணவும்).

பவுல் தமது முடிவிற்குத் தயாராயிருந்தார்: "ஆகையால் நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும்[16] பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது" (ரோமர் 7:12). நீங்கள் 7 முதல் 12 வரையிலான வசனங்களை எவ்வித சிந்தனையும் கொடுக்காமல் விரைவாக வாசித்தால், 12ம் வசனம் திகைப்பிற்குரியதாக வரக்கூடும். ஒருவர், "ஒரு நிமிடம் பொறுங்கள்! பாவ மானது மக்களை வஞ்சித்து அவர்களைச் சகல மோசமான விஷயங்களையும் செய்யும்படியாக்க நியாயப்பிரமாணத்தை எவ்வாறு பயன்படுத்திற்று என்று பவுல் கூறிக்கொண்டிருந்தார்! இப்போது திடீரென்று, அவர் நியாயப்பிரமாணம் *நல்லதென்று* கூறுகிறாரே" என்று நினைக்கலாம். 7 முதல் 12 வரையிலுள்ள வசனங்களில் பவுல் நியாயப்பிரமாணத்தைத் *தற்காத்துக்கொண்டிருந்தார்* என்ற உண்மை பற்றிய கண்ணோக்கை இழந்துவிட வேண்டாம். நியாயப்பிர மாணமல்ல ஆனால் *பாவமே* மரணத்தை உண்டாக்கியது என்று வலியுறுத்தி யிருந்தார் (வசனம் 13ஐக் காணவும்). ஆகையால், அவர் "நியாயப்பிரமாணம் [தன்னில்தானே] பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது" என்று உறுதிப்படுத்தத் தயங்கவில்லை.

பரிசுத்தமான தேவனால் தரப்பட்டபடியால் "நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதாகவும் [*hagios*] கற்பனையும் பரிசுத்தமாயும் உள்ளது." "கற்பனை ... நீதியாயும் [*dikaios*] ... இருக்கிறது" ஏனெனில் அது முடிவற்ற வகையில் நேர்மை யாயும் நீதியாயும் உள்ளது. "கற்பனை ... நன்மையாயும் [*agathos*] இருக்கிறது" ஏனெனில் அது மனிதகுலத்தை ஆசீர்வதிக்கவே தரப்பட்டது. 12ம் வசனம், 7ம் வசனத்திற்குப் பவுலின் திட்டவட்டமான பதிலாக உள்ளது. "நியாயப்பிர

மாணம் பாவமோ?” இல்லை, இல்லை, இல்லை. மாறாக, அது “பரிசுத்தமும், நீதியும் நன்மையானதுமாக உள்ளது.”

13ம் வசனத்தில் நாம் 7 முதல் 12 வரையிலான வசனங்களுக்குத் தொகுப்புரை ஒன்றைக் கொண்டிருக்கிறோம். இவ்வசனமானது, பவுலின் நன்கு பழக்க மான கேள்வி - மற்றும் - பதில் என்ற வடிவமைப்பு கொண்டு தொடங்குகிறது: “இப்படியிருக்க, நன்மையானது [கற்பனையானது] எனக்கு [ஆவிக்குரிய] மரண மாயிற்றோ?” (வசனம் 13அ). மீண்டும், அந்தக் கருத்தேகூட அவரை அதிர்ச்சிக் குள்ளாக்கிற்று: “அப்படியல்ல!” (வசனம் 13ஆ).

நியாயப்பிரமாணம் அல்ல, ஆனால் “மாறாக பாவமே” உண்மையான விரோதியாக இருந்தது என்று பவுல் மறுபடியும் வலியுறுத்தினார் (வசனம் 13இ). நியாயப்பிரமாணம் செய்தது என்னவென்றால் பாவத்தை வெளிப்படுத்தி அதன் உண்மையான இயல்பை வெளியரங்கமாயிற்று: “பாவம் கற்பனையினாலே மிகுந்த பாவமுள்ளதாகும்படிக்கும், அது நன்மையானதை [கற்பனையை]க் கொண்டு எனக்கு [ஆவிக்குரிய] மரணத்தை உண்டாக்கினதினாலே, பாவ மாகவே விளங்கும்படிக்கும் அப்படியாயிற்று” (வசனம் 13ஈ). இதை பின்வரும் எளிய சொற்றொடர்களில் இட என்னை அனுமதியுங்கள்: பாவம் என்பது உண்மையில் எவ்வளவு “பாவம் நிறைந்ததாக” உள்ளது என்பதை மக்கள் கண்டு புரிந்துகொள்ளக் கூடும்படிக்கே நியாயப்பிரமாணமும் அதன் கட்டளைகளும் தரப்பட்டன.

பாவம் என்பது எவ்வளவு பாவம் நிறைந்ததாக உள்ளது? அது பரிசுத்த மான, நீதியான, மற்றும் நன்மையான நியாயப்பிரமாணத்தை எடுத்து, பரிசுத்தமற்ற, அநீதியான மற்றும் பொல்லாங்கான நோக்கங்களுக்காக அதைப் பயன்படுத்துமளவுக்கு, மிகவும் பாவம் நிறைந்ததாக, மிகவும் சீரழிவுதருவதாக, மிகவும் பேய்த்தனமானதாக இருக்கிறது. வில்லியம் பார்க்ளே என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> பாவத்தின் பயங்கரதன்மையானது, அது ஒரு நேர்த்தியான விஷயத்தை எடுத்து அதைப் பொல்லாங்கின் ஆயுதமாக்கும் உண்மையினால் காண்பிக்கப்படுகிறது. பாவம் அதையே செய்கிறது. அது அன்பின் அன்புத்தன்மையை எடுத்து அதை காமவிகாரமாகத் திருப்பக்கூடும். அது சுயாதீனத்திற்கான மதிக்கப்படக் கூடிய விருப்பங்களை எடுத்து அதை பணம் மற்றும் அதிகாரத்திற்கான ஆட்டிப்படைக்கும் கருத்துவெறியாகத் திருப்பக்கூடும். ... அது அன்புமிக்க விஷயங்களை எடுத்து அவற்றை அசுத்த மான தொடுகையுடன் தீட்டுப்படுத்தக்கூடும்.[17]

தேவன் பொல்லாங்கை எடுத்து அதை நன்மைக்காகப் பயன்படுத்தக்கூடும் என்பதே அவருடைய அதிகமான நற்தன்மையாக உள்ளது (ஆதியாகமம் 50:20ஐக் காணவும்), அதேவேளையில் பாவம் நன்மையை எடுத்து அதைப் பொல் லாங்குக்குப் பயன்படுத்தக்கூடும் என்பதே அதன் அதிகமான பாவம்நிறைந்த தன்மையாக உள்ளது.

**நியாயப்பிரமாணம் பிரச்சனையாக இருப்பதில்லை என்றால், எது அப்படி இருக்கிறது?**

நியாயப்பிரமாணம் மனிதகுலத்தின் பிரச்சனைகளுக்கு ஆதாரமூலமாக

*இருக்கவில்லை என்பதில் பவுல் பிடிவாதமாயிருந்தார். விஷயம் அவ்வாறே உள்ளது என்று 14ம் வசனத்தில் அவர் திரும்பவும் வலியுறுத்தினார்: "மேலும், நமக்குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது" (வசனம் 14அ). அவர் நியாயப்பிரமாணத்தை உயர்வாக மதித்து வைத் திருந்தவர்களுடன் தம்மையும் வரிசைப்படுத்திக்கொள்ள, ஒரு கணத்தில் திரும்பவும் தன்மைப் பன்மைச் சொல்லுக்கு ("நாம்") திரும்பினார். நியாயப்பிர மாணம் ஆவிக்குரியதாக (pneumatikos) இருந்தது, ஏனென்றால் தேவனுடைய சொந்த ஆவியே (Pneuma) அதன் ஆதாரமூலமாக இருந்தது (2 பேதுரு 1:21ஐக் காணவும்).*

*நியாயப்பிரமாணத்தைப் பற்றிப் பவுல் கூறியது எதுவோ, அதை அவர் தம்மைக் குறித்துக்கூற இயலாதிருந்தார்: "நானோ பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு, மாம்சத்துக்கு [sarkinos] உரியவனாயிருக்கிறேன்" (ரோமர் 7:14ஆ). 14ம் வசனத்தை நாம் நமது அடுத்த பாடத்தில் கலந்துரையாடுவோம், ஆனால் இங்கு பவுலின் கருத்தை வலியுறுத்துவதற்காக அது உள்ளடக்கப்பட்டிருக்கிறது: நியாயப்பிரமாணத்திடமல்ல, ஆனால்* அவரிடத்தில்தான் *பிரச்சனை இருந்தது. நியாயப்பிரமாணத்தின் கட்டளைகள் பரிசுத்தமானவைகளாக, நீதியானவைகளாக, மற்றும் நன்மையானவைகளாக இருந்தன - ஆனால் அவரால் அவற்றைப் பூரணமாகக் கைக்கொள்ள இயலாதிருந்தது. இவ்வாறாக நியாயப்பிரமாணம் அவரை, பிரமாணத்தை மீறியவர், ஒரு பாவி என்று ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தது.*

*எண்ணெய்ச்சாய ஓவியக்கலை வகுப்பு ஒன்றில் நீங்கள் இருப்பதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள்.[18] வகுப்பின் முன்பாக ஒரு சித்திரம் - மாபெரும் புகழ்பெற்ற சித்திரம் - வைக்கப்பட்டுள்ளது, அதைப் பிரதியெடுக்கும்படி உங்களிடம் கேட்டுக்கொள்ளப்படுகிறது. நீங்கள் உங்களிடத்திலுள்ள வண்ணங்களைக் கலந்து உங்கள் ஓவியத்திரையில் வரைகிறீர்கள். நீங்கள் உங்கள் சித்திரத்தின்மீது உழைப்பைச் செலவிடுகிறீர்கள்; நீங்கள் உங்களால் இயன்ற அளவுக்கு மிகச்சிறப்பாகச் செய்கிறீர்கள். இருந்தபோதிலும், உங்கள் ஓவியத் திரையிலுள்ள சித்திரம் நீங்கள் பிரதியெடுக்கும்படி கூறப்பட்ட சித்திரத்தைப் போன்று சிறிதளவும் காணப்பட*வில்லை. *இது, அந்தப் புகழ்பெற்ற சித்திரம் தவறானது என்று அர்த்தப்படுகிறதா? இல்லை, பிரச்சனை* உங்களிடத்தில், *உங்கள் சொந்த மட்டுப்படுத்தப்பட்ட திறமையிலுள்ளது.*

*அதைப்போலவே, நியாயப்பிரமாணமானது அதன் முழுமையான பரிசுத்தத்தில், நீதியில், மற்றும் நன்மையில் பவுலுக்கு முன்னதாக வைக்கப் பட்டிருந்தது - மற்றும் பவுல் அதைப் "பிரதியெடுக்கும்படி" (அதன் ஆணை களுக்குக் கீழ்ப்படியும்படி) கேட்டுக்கொள்ளப்பட்டார். அவர் தன்னால் இயன்ற அளவு கடினமாக முயற்சி செய்தார்; அவர் தன்னால் இயன்ற அளவு சிறப்பாகச் செய்தார். இருப்பினும், அவர் மிகவும் குறைவுபட்டார். நியாயப்பிரமாணத்திட மல்ல, ஆனால் பவுலின் போதுமற்ற தன்மைகளிலேயே தவறிருந்தது.*

*இந்த அதிகாரத்தின் எஞ்சியபகுதி, நியாயப்பிரமாணத்தின்கீழ்ப் பவுலின் போராட்டங்களை - மற்றும் அவர் தமது சொந்த முயற்சிகள் மூலமாகச் சரியானவற்றைச் செய்ய முயற்சித்தபோது அவருக்கு உண்டான சலிப்புகளைக் கையாளுகிறது. இந்த சலிப்பு 24ம் வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது: "நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை*

*விடுதலையாக்குவார்?" பின்பு, தொடர்ந்து வரும் வசனத்தில், அவர் தமது சொந்தக் கேள்விக்குப் பதிலளித்தார்: "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் [நான் விடுதலையானேன்] தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்!" (வசனம் 25அ).*

## வேதவசனப்பகுதியிலிருந்து நடைமுறை முடிவுகள்

*ரோமர் 7ன் முடிவு வசனங்களை நாம் பிந்திய ஒரு பாடத்தில் படிப்போம். இப்போது, நான் 1 முதல் 14 வரையுள்ள வசனங்களைத் திரும்பவும் கண்ணோக்கி, கிறிஸ்தவர் மற்றும் நியாயப்பிரமாணம் பற்றி நடைமுறை உற்றுநோக்கல்கள் சிலவற்றை ஏற்படுத்த விரும்புகிறேன்.*

*மோசேயின் நியாயப்பிரமாணத்தையே பவுல் தமது சிந்தையில் முதன்மையாகக் கொண்டிருந்தார் என்பதை நினைவில் வையுங்கள் (வசனம் 7ஐக் காணவும்);[19] ஆனால், வழக்கம்போல, நடைமுறைப்பயன்பாடானது மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் காட்டிலும் விரிவாக்கப்படலாம். நமது வேதவசனப்பகுதியில் சிலவேளைகளில் பவுல், "நியாயப்பிரமாணம்" என்பதற்கான கிரேக்க வார்த்தையைத் திட்டவட்டமான சுட்டுச்சொல்லுடன் பயன்படுத்தினார் (வசனம் 7 [இருமுறை], 12, 14)[20] மற்றும் சிலவேளைகளில் அது இல்லாமலேயே பயன்படுத்தினார் (வசனங்கள் 7-9). ஆகையால், நாம் மோசேயின் நியாயப்பிரமாணத்தையும் பொதுவான பிரமாணத்தையும் சேர்த்தே நினைத்துப் பார்ப்போமாக.*

***நியாயப்பிரமாணம் மோசமானதாக இருப்பதில்லை.***

*நியாயப்பிரமாணம் தன்னில் தானே மோசமானதாக இருப்ப தில்லை என்பதை முதலில் குறிப்பிட நான் விரும்புகிறேன். பிரமா ணத்தைப் பற்றிப் பவுல் பேசியிருந்த வழியும் முந்திய அதிகாரங் களில் நியாயப்பிரமாணத்தைப் பற்றி அவர் பேசியிருந்த வழியும், பிரமாணம் மோசமானதாக உள்ளதென்று அவர் கூறுவதாக ஒருவர் மனப் பதிவைப் பெறவைக்கக்கூடியதாக உள்ளது. 7ம் அதிகாரத்தில் அவர் நியாயப்பிர மாணம்* நல்லதாக *இருந்தது என்று வலியுறுத்தினார் (வசனம் 12). அது பாவமா யிருக்க*வில்லை; *மாறாக, அது பாவத்தை* வெளிப்படுத்தியது *(வசனம் 7).*

*மருத்துவர் ஒருவர், ஒரு நோயாளிக்கு இருதய அறுவைச் சிகிச்சை அவசர மாய்த் தேவைப்படுகிறது என்று கூறும்போது, அந்த நோயாளியின் இருதயப் பிரச்சனைக்கு அந்த மருத்துவர் காரணமாகிறாரா? பிரகாசமான விளக்கு ஒன்று அழுக்கையும் குப்பைகூளத்தையும் வெளியாக்கும்போது, விளக்குதான் அந்தக் குப்பைகூளங்களுக்குக் காரணமாயிற்று என்று அர்த்தமாகிறதா? நான் குளியல் அறையிலுள்ள எடைபோடும் இயந்திரத்தில் ஏறிநிற்கையில், அதன் அம்புக்குறியானது நான் இருக்க வேண்டிய எடையைத் தாண்டி அலைவாடும்போது, எனது அதிக எடைக்கு அந்த எடைபோடும் கருவியைக் குற்றம் சுமத்த வேண்டும் என்று அர்த்தமாகிறதா? நமது வேதவசனப்பகுதியில், பவுல் பாவத்தை வெளிப்படுத்துதல் என்பதே நியாயப்பிரமாணத்தின் நோக்கமா யிருந்தது என்று வலியுறுத்தினார். இது நியாயப்பிரமாணத்தைப் பாவத்திற்குப் பொறுப்பாளியாக்குவதில்லை.*

**நமக்கு நியாயப்பிரமாணம் தேவை.**

பாவத்தை வெளிப்படுத்துகிற பிரமாணத்தை ஒழித்துப் போடுதலே பாவத்தின் பிரச்சனைக்குத் தீர்வாக உள்ளது என்று சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். இருப்பினும், மனிதரின் இருதயத்திலுள்ள நோயைக் கண்டுபிடிக்க மருத்துவர் எவரும் இல்லையென்றால், அது அந்த நோயாளியைக் குணப்படுத்துமா? அழுக்கையும் புகைக்கறையையும் வெளிப்படுத்த விளக்கு இல்லையென்றால், அது அந்த அசுத்தத்தை இல்லாது ஒழித்துவிடுமா? உலகத்தில் உள்ள எடைபார்க்கும் இயந்திரம் ஒவ்வொன்றையும் நான் நொறுக்கிப் போட்டுவிட்டால், அது எனது எடைப்பிரச்சனையைத்தான் தீர்த்து விடுமா?

நமக்குப் பிரமாணம் *தேவை* என்ற கருத்தைப் பவுல், நமது வேதவசனப் பகுதியில் நிலைநாட்டினார். பொதுவாக சட்டம் நமக்கு அவசியமானதாக உள்ளது. ரிச்சர்டு ரோஜர்ஸ் என்பவர், “நியாயப்பிரமாணம் வாழ்வை ஒழுங்குபடுத்துவதால் நாம் அதற்கு நன்றி நிறைந்தவர்களாக இருக்க வேண்டும்; அது ‘வாழ்வைப் பாதுகாக்கிறது’ ” என்று எழுதினார்.[21] பிரமாணம் இல்லாத நிலையில், குழப்பமும் கிளர்ச்சியும் மட்டுமே இருக்கும். பிரமாணம் இல்லாத சமூகமானது, தன்னையே அழிக்கும் சமூகமாக உள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக, நமக்குத் *தேவனுடைய* பிரமாணம் தேவைப்படுகிறது. தேவனுடைய பிரமாணமானது, (1) நியாயப்பிரமாணத்தைக் கொடுப்பவரின் இயல்பு மற்றும் பண்பு ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது, (2) நமது வாழ்விற்கு அர்த்தத்தையும் நோக்கத்தையும் தருகிறது, (3) நாம் பின்பற்ற வேண்டிய பாதையை நமக்குக் காண்பிக்கிறது மற்றும் அந்தப் பாதைவழியில் நிலைத்திருக்கும்படி நம்மை ஊக்கப்படுத்துகிறது, மற்றும் (4) கீழ்ப்படிதலுக்கான வெகுமதிகளையும் கீழ்ப் படியாமைக்கான தண்டனைகளையும் வரைகுறிப்பிடுகிறது.

பல தனிநபர்கள், பிரமாணத்தின் கட்டுப்படுத்தும் இயல்பைக் குறித்துக் கலகம் செய்கின்றனர், ஆனால் தேவனுடைய பிரமாணங்கள் நம்மைப் பாதுகாப்பதற்கென்றே தரப்பட்டன. நான் ஒரு பண்ணையில் வளர்ந்துகொண்டிருந்தபோது, எனது குடும்பத்தார், எங்கள் மிருகங்களுக்கு வேலியடைத்திருந்தனர். வேலிகள் மிருகங்களைப் பாதுகாத்தன. ஒரு வேலியானது, ஒரு கன்றுக்குட்டி சாலையில் அலைந்து கார் ஒன்றினால் மோதப் படுவதிலிருந்து அதைப் பாதுகாக்க முடிந்தது. ஒரு வேலியானது ஒரு பசுவை வெளியிலுள்ள தீவனப்புல் வயலுக்குச் சென்று, அதிகமாக மேய்ந்து அதனால் மிகவும் தீவிரமான நோய்க்கு உட்படுவதிலிருந்து பாதுகாக்க முடிந்தது. சில மிருகங்கள் அடைத்து வைக்கப்பட்டிருத்தலை மறுத்து, வேலிகளைத் தாண்டிச் சென்றன. ஒருமுறைக்கும் மேலான சில வேளைகளில் எனது தந்தை வீக்கம் கண்ட ஒரு பசு அல்லது குதிரையின் உயிரைக் காப்பதற்காக அதன் வயிற்றில் ஒரு கத்தியைச் செருகி அதன் அழுத்தத்தை விடுவித்ததைக் கவனித்திருக்கிறேன்.

தேவனுடைய பிரமாணங்கள் நல்லவைகளாகவும் தேவையானவைகளாகவும் இருக்கின்றன. அவைகள் நமக்கு உதவுவதற்கும் நம்மைப் பாதுகாப்பதற்குமே தரப்பட்டன.

**நாம் மோசேயின் நியாயப்பிரமாணத்தினால் கட்டப்பட்டிருப்பதில்லை.**

“நமக்குப் பிரமாணம் தேவை” என்று நான் கூறும்போது, எனது சிந்தையி லுள்ள பிரமாணம் எது என்பதை நான் தெளிவாக்க வேண்டும். நமது வேத

வசனப்பகுதியானது, இன்றைய நாட்களில் எவரொருவரும் மோசேயின் பிரமாணத்தினால் கட்டப்பட்டிருப்பதில்லை என்பதைத் தெளிவாக்குகிறது.[22] கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில், பவுல் நியாயப்பிரமாணம் தற்காலிக நோக்கம் ஒன்றிற்காகக் கொடுக்கப்பட்டிருந்தது, அதை நிறைவேற்றியது என்று விளக்கினார் (3:19, 23-25ஐக் காணவும்). ரோமருக்கு எழுதிய நிருபத்தில், அவரது அடிப்படை அணுகுமுறை மாறுபட்டிருந்தது: நியாயப்பிரமாணம் நம்மை இரட்சிக்க முடியாது என்ற உண்மையே அவரது வலியுறுத்தமாக இருந்தது (ரோமர் 3:20ஆவைக் காணவும்). அதே வேளையில், இயேசுவின் மரணத்திற்குப்பின், மக்கள் இனியும் மோசேயின் நியாயப்பிரமாணத்தினால் கட்டுவிக்கப்பட்டிருப்பதில்லை என்பதைச் சுட்டிக்காண்பிக்கவும் அவர் தயங்கவில்லை.

ரோமர் 7ன் முதல் பகுதியைத் திரும்பவும் கண்ணோக்குங்கள். பவுல், "அப்படிப்போல, என் சகோதரரே, நீங்கள் ... [சிலுவையில் அறையப்பட்ட] கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்" என்று கூறினார் (வசனம் 4இ). திரும்பவும் அவர், "... நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதனின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்" என்று கூறினார் (வசனம் 6ஆ). இவ்விடத்தில் அவரது போதனையானது, யூதர்களுடனான தேவனுடைய உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டு எடுத்துப்போடப்பட்டது என்ற உண்மையைப் பற்றிய புதிய ஏற்பாட்டின் மற்ற வசனப்பகுதிகளுக்கு இசைந்துள்ளது (கொலோசெயர் 2:14; எபேசியர் 2:14, 15; எபிரெயர் 7:11-22; 8:7-13; 9:1; 10:9, 10 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும்).

சிலவேளைகளில், நியாயப்பிரமாணத்தின் குடிமை ஆணைகள் தள்ளுபடி செய்யப்பட்டன, ஆனால் நியாயப்பிரமாணத்தின் *ஒழுக்கரீதியான* கொள்கைகள் இன்னமும் கட்டுகின்றன என்ற கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. டக்ளஸ் J. மூ என்பவர், "குடிமை, சடங்காச்சார, மற்றும் ஒழுக்கப் பிரமாணம் என்பவற்றின் காலத்தினால் கனப்படுத்தப்பட்ட வித்தியாசங்களை" "கேள்விகேட்கப்படக்கூடியவை" என்று அழைத்தார். அவர், "யூதர்கள் நியாயப்பிரமாணத்தை இவ்வாறு பிரித்துவைக்கவில்லை என்பது நிச்சயம், மற்றும் தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் இவ்வாறு செய்தனர் என்பதற்கான புதிய ஏற்பாட்டுச் சான்றுகள் மிகமிகக் குறைவாகவே உள்ளன" என்று கூறினார்.[23] குடிமை/ஒழுக்க வித்தியாசம் என்பது தவறாகப் பயன்படுத்தப்படக்கூடியது என்பதே அவ்வித்தியாசத்தின் அடிப்படைப் பிரச்சனையாக உள்ளது. எடுத்துக்காட்டாக, பத்துக்கட்டளைகள் என்பவை, ஒழுக்கரீதியான சட்டத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளன என்று வலியுறுத்துதல், அவற்றில் ஏழாவது கட்டளையான ஓய்வுநாள் பிரமாணம் இன்னமும் நம்மைக் கட்டுகிறது என்று கூறுவதாக உள்ளது (யாத்திராகமம் 20:8-11ஐக் காணவும்). நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதற்கு முன்பு நிலவியிருந்த அடிப்படை ஒழுக்கக் கொள்கைகளைச் சிந்தித்து பார்த்தல் மிகவும் மேன்மையானதாக உள்ளது (உதாரணமாக, ஆதியாகமம் 9:6ஐக் காணவும்). இப்படிப்பட்ட கொள்கைகள் முதலில் மோசேயின் நியாயப்பிரமாணத்தில் இணைக்கப்பட்டுப் பின்னர் இயேசுவின் புதிய ஏற்பாட்டிலும் சேர்க்கப்பட்டன.

ரோமர் 15:4ல், பவுல் "தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு

எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" என்று கூறினார். அந்த வசனத்தை நாம் படிக்கும்போது, கிறிஸ்தவர்களின் பழைய ஏற்பாட்டுப் பயன்பாட்டைப் பற்றி நான் கலந்துரையாடுவேன். புதிய ஏற்பாட்டின் ஒழுக்கக் கொள்கைகள் பழைய ஏற்பாட்டில் விளக்கப்பட்டு செயல்முறைப்படுத்தப்பட்டிருத்தலைக் காணுதல் என்பது, புதிய ஏற்பாட்டை நாம் புரிந்துகொள்ள உதவுகிறது.

### நாம் இன்னமும் பிரமாணத்திற்குக் கீழானவர்களாகவே இருக்கிறோம்.

பிரமாணம் பற்றிய பவுலின் போதனையை அவர் நோக்கங்கொண்டுள்ளதற்கும் அதிகதொலைவில் சிலர் எடுத்துச் செல்கின்றனர். அவர்கள், "நாம் மோசேயின் பிரமாணத்திலிருந்து மாத்திரமல்ல, ஆனால் *எந்தவிதமான* மதப்பிரமாணத்திலிருந்தும் நாம் விடுதலையாகி இருக்கிறோம்" என்று கூறுகின்றனர். நாம் இனியும் பிரமாணம்/கிரியைகள் என்ற *முறைமையின்*கீழ் இருப்பதில்லை என்பது உண்மையாக இருக்கையில், இது நாம் கீழ்ப்படிவதற்கான பிரமாணங்கள் எதையும் தேவன் கொடுத்திருப்பதில்லை என்றோ அல்லது நாம் அவரது பிரமாணங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களாக இருப்பதில்லை என்றோ அர்த்தப்படுவதில்லை.

இன்றைய நாட்களில் "பிரமாணம்" என்ற வார்த்தையின்மீது சிலர் வெறுப்புக் கொண்டுள்ளனர், ஆனால் பவுலும் புதிய ஏற்பாட்டின் பிற எழுத்தாளர்களும் அந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தத் தயங்கியதில்லை (1 கொரிந்தியர் 9:21; கலாத்தியர் 6:2; யாக்கோபு 1:25 ஆகியவற்றைக் காணவும்). மற்றும் சிலர், "கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டியது" என்ற கருத்தை விரும்புவதில்லை; ஆனால் இயேசு, "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால், என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" என்று கூறினார் (யோவான் 14:15). பவுல், "தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறதே காரியம்" என்று கொரிந்தியர்களுக்கு நினைவூட்டினார் (1 கொரிந்தியர் 7:19ஆ). கீழ்ப்படியாமியம் (பிரமாணங்களை/கற்பனைகளைக் கைக்கொள்ளுதல் முக்கியமற்றது என்ற நம்பிக்கை) என்பதை எதிர்த்து நிற்பதே யோவான் தமது முதல் நிருபத்தை எழுதியதற்கான நோக்கங்களில் ஒன்றாக இருந்தது (1 யோவான் 2:3, 4; 3:22, 24; 5:2, 3 ஆகியவற்றைக் காணவும்).

இன்றைய நாளில் நாம் கீழ்ப்பட்டுள்ள பிரமாணங்கள் இயேசுவின் புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. இது எரேமியாவினால் முன்னுரைக்கப்பட்ட புதிய உடன்படிக்கையாக உள்ளது (எரேமியா 31:31-34; எபிரெயர் 8:7-13ஐக் காணவும்). இது இயேசு சிலுவையில் மரித்தபோது செயல்விளைவுக்கு வந்த ஏற்பாடாக உள்ளது (எபிரெயர் 9:16, 17ஐக் காணவும்).

### பிரமாணம் நம்மை இரட்சிப்பதில்லை, இரட்சிக்க இயலாது.

நாம் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிற பிரமாணங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களாக இருக்கிறோம், ஆனால் எந்தப் பிரமாணமும் - புதிய ஏற்பாட்டுப் பிரமாணமும்கூட - நம்மை இரட்சிக்க முடியாது என்பதை நாம் புரிந்துகொள்வது அவசியமாக உள்ளது. இரட்சித்தல் என்பது பிரமாணத்தின் இயல்பாயிருப்பதில்லை. பிரமாணம் பாவத்தை விளக்கப்படுத்த முடியும் ஆனால் பாவத்தை நீக்கிப்போட முடியாது. அது பாவத்தை வெளிப்படுத்த முடியும், ஆனால் பாவத்

திற்கு ஒரு பரிகாரத்தைத் தர முடியாது. அது பாவத்தைக் கண்டனம்செய்ய முடியும் ஆனால் அது பாவியை ஆறுதல்படுத்த முடியாது. மீண்டுமாக, விளக்கு பற்றிய விவரிப்பை நினைத்துப்பாருங்கள்: பிரமாணம் என்ற விளக்கு நமது வாழ்வி லுள்ள விரிசல்களையும் வெடிப்புகளையும் வெளிக்காட்ட முடியும், ஆனால் அது வெற்றிடங்களை இட்டு நிரப்ப முடியாது. பிரமாணத்தின் வெளிச்சமானது நமது வாழ்வின் இருளான மூலைகளில் மறைந்துள்ள அழுக்கை வெளியாக்க முடியும், ஆனால் அந்தக் கறையை அது நீக்க முடியாது.[24]

நியாயப்பிரமாணம் நமது பாவம் நிறைந்த தன்மையைப் பற்றி நாம் அறியச் செய்யமுடியும், ஆனால் நமது குற்றத்தை அது நீக்க முடியாது என்பதால், நாம் மனிதகுலத்திற்குத் தேவனால் தரப்பட்ட பிரமாணத்தின் இன்னொரு நோக்கத்தையும் இங்கு நாம் கூடுதலாகக் கூற முடியும்: மக்கள் இரட்சிப்பிற்காக வேறெங்காவது கண்ணோக்கும்படியாக்க - குறிப்பாக, அவரது கிருபை நமக்கு மிக அவசியமாகத் தேவை என்று நாம் அறியும்படியாக்க என்பதே அந்த நோக்க மாக உள்ளது. மோசேயின் நியாயப்பிரமாணம் மக்களை இயேசுவினிடத்தில் வழிநடத்துவதற்காக கொடுக்கப்பட்டது என்று பவுல் கூறினார் (கலாத் தியர் 3:24ஐக் காணவும்). ஒரு கருத்தில், ஆத்துமாக்களுக்கு இயேசுவைச் சுட்டிக்காண்பித்தல் என்பதே தேவனால் தரப்பட்ட பிரமாணம் எல்லாவற்றினு டைய நோக்கமாக உள்ளது.

## முடிவுரை

நமது அடுத்த இரண்டு பாடங்களில், நாம் ரோமர் 7ம் அதிகாரத்தைப் பற்றிக்கூற அதிகமானவற்றை கொண்டிருப்போம். இந்தப் பாடத்தைச் சில கேள்விகளுடன் முடிக்க என்னை அனுமதியுங்கள்:

- உங்கள் வாழ்வுக்குத் திசையிலக்கு அளிப்பதற்காக உங்களுக்குப் பிரமாணத்தைக் கொடுக்கப்போதுமான அளவுக்கு தேவன் அக்கறையுள்ளவராக இருந்தார் என்ற உண்மையை நீங்கள் மதிக் கிறீர்களா? அல்லது பாராட்டுகிறீர்களா?
- இன்றைய நாட்களில், நாம் மோசேயின் பிரமாணத்தின்கீழ் அல்ல, ஆனால் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டின்கீழ் இருக்கிறோம் என்பதைப் புரிந்துகொள்கிறீர்களா?
- நாம் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிதலினால் அல்ல, ஆனால் அதற்கு மாறாக, தேவனுடைய கிருபையினாலேயே இரட்சிக்கப்பட முடியும் என்பது உங்கள் சிந்தையில் தெளிவாக உள்ளதா?
- தேவனுடைய கிருபையை உங்களுடையதாக்கிக்கொள்ள நீங்கள் செய்ய வேண்டியவை என்ன என்பது பற்றி இயேசு கூறியுள்ள வற்றைப் புரிந்துகொண்டிருக்கிறீர்களா (யோவான் 3:16; லூக்கா 13:3; மத்தேயு 10:32; மாற்கு 16:15, 16; யோவான் 14:15)?
- நீங்கள் செய்யும்படி இயேசு உங்களிடத்தில் கேட்டுக்கொண்டுள்ள வற்றை நீங்கள் *செய்திருக்கிறீர்களா?*

## பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

*பாவம் ஆதாமை எப்படிக் கொன்றது, பாவம் பவுலை எப்படிக் கொன்றது, மற்றும் பாவம் நம்மை எப்படிக் கொல்கிறது என்பவற்றை ஒப்பிடும் வரைபடம் ஒன்றை நீங்கள் வரையக்கூடும். இந்தப் பாடத்தின் நடைமுறைப் பயன்பாட்டின் அணுகுமுறைக்கான இன்னொரு வழி பின்வருமாறு: "பிரமாணத்தின் இயல்பு மேன்மைப்படுத்தப்பட்டது"; "பிரமாணத்தின் நோக்கம் விளக்கியுரைக்கப் பட்டது"; "பிரமாணத்தின் பலவீனம் வெளியாக்கப்பட்டது."*[25]

---

*குறிப்புகள்*

[1]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 189. [2]James R. Edwards, *Romans,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1992), 186. [3]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 271. [4]Adapted from F. F. Bruce, *The Letter of Paul to the Romans,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 121. [5]Morris, 277. [6]*குறிப்பாக இவ்வதிகாரத்தின் கடைசிப்பகுதியில் இந்த நிலைப்பாட்டிற்குள்ள சில பிரச்சனைகள் பற்றி அடுத்த பாடத்தில் கலந்துரையாடப்படும்.* [7]"Desire" *மற்றும்* "desires" *என்ற ஆங்கில வார்த்தைகள் ரோமருக்கு எழுதிய நிருபத்தின் மற்ற இடங்களில் காணப்படுகின்றன, அங்கு அவைகள் நல்விருப்பங்களைக் குறிக்கின்றன (9:18; 10:1 ஆகிய வசனங்களைக் காணவும்). இருப்பினும், அந்த வார்த்தைகள் மாறுபட்ட தொரு கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவைகளாக உள்ளன.* [8]Bruce, 140. [9]KJV *வேதாகமத்தில் இவ்விடத்தில்* "concupiscence" [*"சிற்றின்பவெறி"*] *என்றுள்ளது. "பலத்த விருப்பம்" அல்லது "காமவெறி" என்று அர்த்தப்படும் இவ்வார்த்தை இன்றைய நாட்களில் மிகவும் அரிதாகவே பயன்படுத்தப்படுகிறது.* NKJV *வேதாகமத்தில்* "evil desire" [*"பொல்லாத ஆசை"*] *என்றுள்ளது.* [10]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 440.

[11]Richard A. Batey, *The Letter of Paul to the Romans,* The Living Word Commentary (Austin, Tex.: R. B. Sweet Co., 1969), 94. [12]Vine, 151. (Emphasis mine.) [13]Morris, 283. *வெளிப்படுத்தின விசேஷம் 12ல் சாத்தான், "உலகமனைத்தையும் மோசம்போக்குகிறவன்" என அடையாளம் காணப்பட்டுள்ளான் (வசனம் 9; 2 கொரிந்தியர் 2:11; 11:14; எபேசியர் 6:11 ஆகியவற்றைக் காணவும்).* [14]Bruce Barton, David Veerman, and Neil Wilson, *Romans,* Life Application Bible Commentary (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1992), 138. *இதேபோன்ற கருத்துக்கள் பின்வரும் புத்தகத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன:* William Barclay, *The Letter to the Romans,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 96. [15]J. W. McGarvey and Philip Y. Pendleton, *Thessalonians, Corinthians, Galatians and Romans* (Cincinnati: Standard Publishing, n.d.), 353. [16]*அனேகமாகப் பவுல், "நியாயப்பிரமாணம்" மற்றும் "கற்பனை" என்பவற்றை ஒன்றிற்குப்பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தியிருக்கலாம். வித்தியாசம் ஏதேனும் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றால், அது முழுமையும் "நியாயப்பிரமாணம்" மற்றும் நியாயப்பிரமாணத்தின் ஒரு பகுதியாக "கற்பனை" என்பதாக இருக்கலாம்.* [17]Barclay, 97. [18]*இதை நீங்கள் வாழும் கலாச்சாரத்திற்கு ஏற்றபடி தழுவியமைத்துக் கொள்ளுங்கள்: பிரதியெடுக்கப் பல ஆண்டுகள் பயிற்சி பெற வேண்டிய மற்றும் உருவாக்க அனுபவம்*

தேவைப்படும் விஷயம் சிலவற்றைக் கற்பனை செய்துகொள்ளும்படி கேட்டுக் கொள்ளலாம். [19]7 முதல் 13 வரையிலான வசனங்களின் சந்தர்ப்பப்பொருளில், "கற்பனை" என்பது இச்சியாதிருத்தல் என்பதற்கான கற்பனையையே திட்டவட்டமாகக் குறிப்பிடுகிறது. [20]"நியாயப்பிரமாணம்" என்று அர்த்தப்படும் "கற்பனை" என்ற சொற்றொடர், கிரேக்க மொழியில் *எப்போதுமே* திட்டவட்டமான சுட்டுச்சொல்லைப் பெற்றுள்ளது (வசனங்கள் 8, 9, 10, 11, 12, 13).

[21]Richard Rogers, *Paid in Full: A Commentary on Romans* (Lubbock, Tex.: Sunset Institute Press, 2002), 101. [22]யூத மார்க்கத்தமைந்திராத புறஜாதிகள் *ஒருக்காலும்,* பழைய ஏற்பாட்டு காலத்தில்கூட நியாயப்பிரமாணத்தினால் கட்டுவிக்கப்பட்டிருந்ததில்லை. [23]Douglas J. Moo, *Romans,* The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 223. [24]Adapted from Charles R. Swindoll, *The Grace Awakening* (Fullerton, Calif.: Insight for Living, 1990), 15; D. Stuart Briscoe, *Mastering the New Testament: Romans,* The Communicator's Commentary Series (Dallas: Word Publishing, 1982), 148. [25]Adapted from Larry Deason, *"The Righteousness of God": An In-depth Study of Romans,* rev. (Clifton Park, N.Y.: Life Communications, 1989), 189.